


கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், சமூக மருந்தியல் துறையின் சார்பாக, டெங்கு காய்ச்சல் ஒழிப்பு பேரணியை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் இன்று (08.09.2016) தொடங்கி வைத்து, பேரணியில் கலந்து கொண்டார். மருத்துவக்கல்லூரி முதல்வர் மரு. இரவீந்திரன், துணை இயக்குநர் (சுகாதாரபணிகள்) மரு. மதுசூதனன் ஆகியோர் உடனுள்ளார்.

செ.வெ.எண்: 609/2016 நாள்: 08.09.2016

**கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், சமூக மருந்தியல் துறையின் சார்பாக, டெங்கு காய்ச்சல் ஒழிப்பு பேரணியை இன்று (08.09.2016) தொடங்கி வைத்து, பேரணியில் கலந்து கொண்டார்.**

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், சமூக மருந்தியல் துறையின் சார்பாக, டெங்கு காய்ச்சல் ஒழிப்பு பேரணியை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் இன்று (08.09.2016) தொடங்கி வைத்தார்.

இப்பேரணியானது மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலிருந்து புறப்பட்டு, டெரிக், இராணித்தோட்டம் அரசு போக்குவரத்து கழகம் பனிமனை வழியாக சென்று ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை வளாகத்தில் சென்று நிறைவடைந்தது.

இப்பேரணியில் சுமார் 250-க்கும் மேற்பட்ட மருத்துவ கல்லூரி மாணவ, மாணவியர்கள் டெங்கு கொசு ஒழிப்பு குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும்வகையில், பதாகைகளை கையில் ஏந்தியபடி கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சியில் மருத்துவக்கல்லூரி முதல்வர் மரு. இரவீந்திரன், துணை இயக்குநர் (சுகாதாரபணிகள்) மரு. மதுசூதனன், மருத்துவக்கல்லூரி கண்காணிப்பாளர் மரு. இராதாகிருஷ்ணன், மருந்தியல் துறை தலைவர் மரு. சுரேஷ்பாலன், மரு. லீயோ டேவிட், அகஸ்தீஸ்வரம் வட்டாட்சியர் திரு. எ.வி. மூர்த்தி மற்றும் மருத்துவக்கல்லூரி மாணவ, மாணவியர்கள் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.